ஒதியத்தூரிலுள்ள ஆடுவளர்ப்புக் கூட்டுறவு சங்கம்.

*வின எண் 100— திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதி ஒதியத்தூரிலுள்ள ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கம் இயங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் இயங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) இந்தச் சங்கத்தினர், தீர்மானம் நிறைவேற்றி தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கு கடன் மனுக்களை கொடுத்து நிதி உதவி பெற்றபின் சிறப்புக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரசின் மானியம் வழங்கப்படும். இதற்கான நடவடிக்கைகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

[முற்பகல் 10-10]

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு சங்கம் தற்போது இயங்குகிறதா அல்லது இயங்க வில்லையா என்ற கேள்விக்கு விடையளிக்க வேண்டும். அதோடு, அங்கே பணியாற்றுகின்ற அதிகாரிகள் அலுவலர்கள், சிப்பந்திகள் ஆகியோர்களுக்கு இதுவரை சம்பளம் கொடுக்கப்பட்டு வருகின்றதா ? இந்தச் சங்கத்தின் மூலம் மக்கள் பயனடையவில்லை ; இது அரசாங்கத்திற்கு ஒரு பேரிழப்பாக இருப்பதால், அதற்கு என்ன மாற்று யோசனை என்பதையும், இந்த இழப்பை இந்த அரசு எப்படி ஈடுகட்டப் போகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இந்த ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் 22.12.76-லே பதிவு செய்யப்பட்டது. 195 நபர்கள் தலா ரூ. 10 வீதம் கட்டி உறுப்பினர்களாகச் சேர்ந்தவர்கள். முதலில் இந்த உறுப்பினர்கள் கடன் பெறுவதற்கு பாரத வங்கியை நாடினர். இந்த உறுப்பினர்கள் அவர்களுக்குள் ஷூயூரிடி தரமுடியாத காரணத்தினால், அவர்கள் கடன் மனுக்களை பாரத வங்கிக்கு அனுப்பப்படவில்லை. அதேமாதிரி, கங்கைவெள்ளியில் இந்தியன் பாங்கியில் பீல்ட் ஆபீசர் இல்லாததால் கடன் பெற முடியவில்லை. இருப்பினும், நடப்பு ஆண்டில் கால்நடை வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் கடன்பெறத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்ட இந்தச் சங்கத்தில் கடன் கோரும்போது

பழைய கடனைக் கொடுத்தால் தான் கடன் கொடுக்கப்படும் என்ற நிபந்தனை இருப்பதால், அவர்களால் கடன்பெற இயலவில்லை. மேலும், அப்படியே ஜாமீன் கொடுக்க வேண்டுமென்றால்; அவர்கள் பொருளாதார நிலையில் உயர்மட்டத்தில் இருப்பவர்களிடமிருந்து ஜாமீன் பெறவேண்டும். அப்போது அவர்களுக்கு அவர்கள் கடமைப்பட்டவர்களாக ஆகிவிடுகிறார்கள். உண்மையாக, இந்த அரசாங்கம் அவர்களுக்கு உதவ வேண்டுமென்றால், அந்தக் கடன் தொகையை நேரடியாகவே அவர்கள் பெறக்கூடிய சூழ்நிலையில் இருக்கவேண்டும். அந்த வகையில் ஏழை எளிய மக்களுக்கு ஷ்யூரிடி இல்லாமல் கடன் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அங்கத்தினர்களுக்குள் நல்லமுறையில் அவர்களே ஷ்யூரிடி கொடுக்கலாம்; அதற்கு அவர்களுக்குள் ஒற்றுமை இருக்கவேண்டும் அப்போதுதான் அதை நல்லமுறையில் செயல்படுத்தமுடியும். அப்படி இல்லையென்றால், எப்படி கடன் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி டி. யசோதா: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் கொடுக்கின்ற விஷயத்தில் மனு செய்கின்றவர்கள் கணவன் கடன் பெற்றிருந்தால், மனைவிக்கு அதிலே கடன் கொடுக்கக் கூடாது என்ற முறையிருப்பது அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இதைப்பற்றிய தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

குற்றாலம் அருவியில் குளிப்பதற்கான கட்டணம்

குறுகியகால வினா எண். 1—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள குற்றாலத்தில் உள்ள அருவியில் குளிக்கும் அனைவரிடமிருந்தும் கட்டணம் வசூலிக்க நகரியம் முடிவு செய்துள்ளதென்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) அடுத்த சீசன் (1.6.82) முதல் குற்றாலம் அருவிகளில் குளிப்பவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்க நகரியம் முடிவு செய்துள்ளது.

(ஆ) நகரியத் தீர்மானத்தின்படி அருவிகளில் குளிக்க, பெரியவர்களுக்கு 50 காசும், சிறார்களுக்கு 25 காசும், கட்டணமாக வசூலிக்க முடிவு செய்துள்ளது.